மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, திரு. ஆறுமுகம் உட்காருங்கள்.*

(ஈ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கோரம்பள்ளம் குளத்திற்கு தாமிரபரணி ஆற்றுத் தண்ணீர் திறந்துவிடுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *டாக்டர் கிருஷ்ணசாமி, என்ன சொல்லுங்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதிக்குட்பட்ட, கோரம்பள்ளம் குளத்திற்கு தாமிரபரணி ஆற்றுத் தண்ணீர் வராத காரணத்தால் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்தப் பகுதி பாபநாசம்–மணிமுத்தாறினுடைய கடைநிலைப் பகுதியாகும். ஏற்கெனவே 37,000 ஏக்கர் பாசன நிலங்களுக்கு நீர் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனுடைய பணி 31–10–2015 அன்று முடிவடைகிறது. அவர்கள் கோரிய பகுதிக்கு நீர் இருப்பினைப் பொறுத்து நீர் வழங்குகின்ற சூழல் நவம்பர் மாதம் ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நவம்பர் மாதம் நீர் இருப்பைப் பொறுத்து உரிய நீர் அங்கே விடப்படும். ஏற்கெனவே உறுதியளிக்கப்பட்ட பாசனப் பகுதிகளுக்கு நீர் சென்று கொண்டிருக்கிறது. அதனால், இடையில் நீர் விடுவதற்கு வாய்ப்பு இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஆ) கரும்பு விவசாயிகளுக்கு பாக்கித் தொகை வழங்கப்படாமை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

2015 செப்டம்பர் 25]

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "கரும்பு விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டிய பாக்கித் தொகை குறித்து கடந்த 5 ஆம் தேதி அன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள், இதுகாறும் கொடுக்கப்படவில்லை" என்று சொன்னார்கள். இப்போது நிலுவைத் தொகையை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். 1,000 கோடி ரூபாயாக இருந்த அந்த நிலுவைத் தொகை 800 கோடி ரூபாயாகக் குறைந்து, இப்போது 600 கோடி ரூபாயாகக் குறைந்திருக்கிறது. இதற்கு மூக்கியமான காரணம் என்னவென்று சொன்னால், மத்திய அரசு 6,000 கோடி ரூபாய் கரும்பாலைகளுக்கு பாக்கித் தொகை வழங்குவதற்கு வங்கியின் மூலமாகக் கடன் பெற்றுத் தருவதாகச் சொல்லியிருந்தார்கள். அது இன்னும் வராத காரணத்தால் அந்தப் பாக்கி இருந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் விவசாயிகளுக்குப் பணம் சென்று சேரவேண்டுமென்பதற்காக அந்த முதலாளிகளை அழைத்துப் பேசி, வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். மற்ற மாநிலங்களிலெல்லாம் மொத்தம் 26,000 கோடி ரூபாய் அளவிற்குப் பாக்கியிருக்கிறது. நாடு முழுவதும் இந்தப் பிரச்சினை இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், விலையைப் பொறுத்தவரையில், இப்போது மகாராஷ்ட்டிராவில் 1,800 ரூபாய் கொடுக்கிறார்கள்; கர்நாடகாவில் 1,800 ரூபாய்தான்; அவர்கள் 200 ரூபாய் போட்டு, 2,000 ரூபாயாக கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கே பாக்கியிருக்கிறது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கூட்டுறவுத் துறையின் மூலமாக 2,650 ரூபாய் வழங்கிக் கொண்டிருக்கிறது. மத்திய அரசினுடைய வங்கிக் கடன் வந்தவுடன் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விவசாயிகளுக்கு அந்தப் பாக்கித் தொகையைப் பெற்றுத் தரும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கையை நாங்களும் கவனத்தில் எடுத்துக்கொண்டிருக்கின்றோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.